Crl.Misc.39

# D E P O S I T I O N  O F  W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.No.17/2018

**P.W**.1

| | |
|---|---|
| Name | : திருமதி.பகவதி |
| Father/Husband Name | : திரு.ரவி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2022

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மயிலாடுதுறையில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்த ரவி எனது கணவர் ஆவார். கடந்த 14.9.2017 ம் தேதி இரவு 11.30 மணியளவில் ஆம்னி வேன் பழைய நான்கு சக்கர உதிரி பாகங்கள் வாங்கிக்கொண்டு சென்னையிலிருந்து மயிலாடுதுறை நோக்கி வந்தார்கள். இ.சி.ஆர்.உள்ள அடுப்பாங்கரையில் உள்ள ஓட்டலில் காபி குடிப்பதற்காக நிறுத்திவிட்டு காபி சாப்பிட்டு வந்தார்கள். அப்போது ஒரு இருசக்கர வாகனம் ஹீரோ பிளெண்டர் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் அவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் வந்து பார்த்து விசாரித்தபோது அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக சொன்னார்கள். இது குறித்து காவல் நிலையத்தில் நான் புகார்

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

சம்பவம் குறித்து எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது என்றாலும் கேள்விபட்டு தான் சென்று பார்த்தேன் என்றாலும் சரிதான்.